தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1972 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை **மண்டபத்தில்** காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் **தலைமையில்** பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Drinking Water-Supply Schemes

* 473 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the work in connection with the scheme for the implementation of drinking water-supply for Krishnagiri in Dharmapuri district has been taken up; and

(*b*) the stage at which the matter stands at present?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பல்வேறு நிலைகளில் பணிகள் நடந்தேறி வருகின்றன. குடிநீர் வழங்கு திட்டத்தின் தொடக்க நிலைப் பணிகள் நடைபெறும் இடத்திலும் குடிநீர் வழங்கு நீர்த்தேக்கம் கட்டும் இடத்திலும் நடைபெறும் பணிகளைத் தவிர, பிற பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. சோதனை அடிப்படையில் குடிநீர் வழங்கு திட்டத்திற்கான விசையேற்றப்பெருங்குழாய் தயாராக உள்ளது.

தாழ்ந்த மட்டத்தில் உள்ள பகுதியில் நீர்வழங்கு பெருங்குழாய்களை அமைக்கும் பணி 91 சத வீதம் முடிவு பெற்றுள்ளது. அது போல உயர்ந்த மட்டத்திலுள்ள பகுதியில் குடிநீர் வழங்கு பெருங்குழாய்கள் அமைக்கும் பணி 63 சத வீதம் முடிவு பெற்றுள்ளது. இவ்விரு பகுதிகளிலும் குடி நீர் வழங்கு நீர்த்தேக்கங்களைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தைச் சேர்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கிடையே, நகருக்கு திட்டத்தின்கீழ் சோதனை அடிப்படையில் நகருக்குக் குடிநீர் வழங்கலை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : உப தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு உபயோகப்படுத்தக்கூடிய குழாய்கள் பாலிதீன் பைப்களாக இருக்க வேண்டும் என்று கூறியிருப்பதாக அறிகிறேன். பாலிதீன் பைப் எத்தனை காலம் பயன்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா ? அவற்றை உபயோகப்படுத்துவது சரியென்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தப் பைப்புகளைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்கள் அளிக்க முடியும்.

THIRU B. VENKATASWAMY : Is it not a fact that this scheme has been delayed? May I know from the Hon. Minister the reasons for the same and May I also know when the scheme will be completed?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தத் திட்டம் ஆறு மாத காலத்திற்குள்ளாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இடையில் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே குழாய் போட்டுத் தண்ணீர் எடுத்துவர மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நாம் அனுமதி பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். தாமதத்திற்கு அதுவும் ஒரு காரணம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister the total amount of money sanctioned for the scheme?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் குடிநீர் வழங்குத் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு 28 லட்ச ரூபாய்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரிக்குக் குடி நீர் வழங்கு திட்டத்திற்கு மொத்த மதிப்பீடுத் தொகை எவ்வளவு ? மேலும், மத்திய அரசாங்கத்திடமிருந்து, தேசிய நெடுஞ்சாலை கடந்து தண்ணீர் கொண்டு செல்ல அனுமதி பெற வேண்டும் என்று சொன்னார்கள். அது எவ்வளவு காலமாகத் தடையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது நீண்ட காலமாகத் தடையாக இருக்கிறது. இன்னும் அனுமதி வரவில்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, முதல்வரவர்கள் பதில் கூறும் போது, மத்திய அரசாங்கத்திடமிருந்து இன்னும் அனுமதி கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். குடிநீர் வழங்கல் போன்ற மிக அத்தியாவசியமான

1972 மார்ச் 14]

தேவைகளுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி வருவதற்குள்ளாக, அதை எதிர்பார்த்தே அந்த நெடுஞ்சாலையை வெட்டி, பைப்புகள் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுவும் ஆராயப்பட வேண்டிய ஒரு நல்ல யோசனை.

திரு. என். மருதாசலம்: குடி நீர்த் திட்டத்தில் கோவை சிறுவாணித் திட்டம் குறித்துப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்று, கேட்ட போதெல்லாம் அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். எப்பொழுது பேச்சுவார்த்தை முடியும். எப்பொழுது அது நடைபெறும் என்று முதலமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேரளாவைப்பற்றி அடிக்கடி இந்த மன்றத்தில் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சியினரே சேர்ந்து இதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் நலமாக இருக்கும்.

THIRU B. VENKATASWAMY: Water is most important for everybody's day-to-day life. May I know from the Hon. Minister why the Central Government is delaying on such a vital matter like protected water-supply?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கேள்வியைத்தான் நாங்களும் எங்களுக்குள்ளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

* 474. வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை நகரின் குடிநீர் திட்டத்தை விஸ்தரிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வாகாப்: இராணிப்பேட்டை நகராட்சியிலிருந்து எல்.ஐ.சி. மூலமாகவோ அல்லது அரசாங்கத்திலிருந்தோ இந்த விஸ்தரிப்புத் திட்டத்திற்காக ஒரு லட்ச ரூபாய் கடனைக் கேட்டு மனுச் செய்திருக்கிறார்கள். அதை அரசு பரிசிலனை செய்து சாங்ஷன் செய்யுமா?